சார்பு நீதிமன்றம், மன்னார்குடி

OS No. 103/2022

18.03.2025

<u>வா.சா.1 நாராயணன் த/பெ. ராகவாச்சாரியார் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

இந்த வழக்கை யார் யார் சேர்ந்து போட்டுள்ளோம் என்றால் நானும் எனது உடன்பிறந்தவர்களுலும் சேர்ந்து போட்டுள்ளாம். எனது தகப்பனாருக்கு 4 பெண்கள் , 3 ஆண்கள் ஆவோம். வழக்கு சொத்து எங்கு உள்ளது என்றால் மன்னார்குடி நகரம் வார்டு 1 ல் கண்ணன் நகரில் உள்ளது. சொத்தின் TS No. 2364( Old Number ) , New No. 20 ஆகும். வழக்கு சொத்தானது எனது தகப்பனார் வாங்கியது. எனது தகப்பனார் 1948 ல் நவம்பரில் ஒரு பத்திரம் டிசம்பரில் ஒரு பத்திரமும் இரண்டு பத்திரம் மூலம் கிரயம் பெற்றார். அந்த அசல் கிரய பத்திரங்கள் என்வசம் உள்ளதா என்றால் உள்ளது. அதை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளேனா என்றால் அசலை தாக்கல் செய்யவில்லை சான்றிட்ட நகலை தாக்கல் செய்துள்ளேன். அசல் எங்கு உள்ளது என்றால் எங்கள் வீட்டில் தான் உள்ளது. அசலை தாக்கல் செய்யப்படாமல் ஏன் சான்றிட்ட நகலை தாக்கல் செய்தேன் என்றால் அசல் ஆவணம் மிகப்பழைமையான ஆவணமாக உள்ளது அதன் பேப்பரும் பழைய பேப்பராக ஆகிவிட்டதால் சான்றிட்ட நகலை தாக்கல் செய்தேன். அந்த இரண்டு கிரய பத்திரங்களில் வழக்கு சொத்து மட்டும் உள்ளதா அல்லது பல சொத்துகள் உள்ளதா என்றால் பலசொத்துகளும் சேர்ந்து உள்ளது. வழக்கில் சொல்லியுள்ள சொத்தின் மொத்த பரப்பளவு ஏறக்குறைய 7000 ச. அடி இருக்கும். அதில் நான் வழக்கு போட்டிருப்பது 1047 ச.அடிக்கு தான். 1047 ச.அடியில் என்ன கட்டுமானம் உள்ளது என்றால் வேலி மட்டும் தான் உள்ளது. 1047 ச. அடி என்பதை எதன் அடிப்படையில் குறிப்பிட்டு சொல்கிறேன் என்றால் சர்வேயர் வைத்து 2022 பிப்ரவரியில் அளந்து பார்த்தேன். அப்போதும் வேலிதான் இருந்தது.

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதன் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

S MUTHURAMAN

Digitally signed by S MUTHURAMAN
DN: cn=S MUTHURAMAN, ou=SALEM, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.03.21 14:45:23 +0530

சார்பு நீதிபதி,

மன்னார்குடி.